Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 131

வியாழக்கிழமை 06 ஏப்ரல் 2023

பங்குனி 23 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

கடன்களுக்கான ஆதாயமாக

## இலங்கையில் ரேடர் அமைக்கிறது சீனா!

பிரிட்டன் ஊடகம் பரபரப்பு

கொழும்பு, ஏப். 6
இலங்கைக்கு சீனா வழங்கிய கடன்களின் மூலோபாய ஆதாய நடவடிக்கையாக, மாத்தறைப் பகுதியில் ரேடர் ஒன்றை அமைப்பதற்கு சீனா திட்டமிட்டுள்ளது என்றும் இதற்காக இரண்டு நாடுகளுக்கு இடையிலும் உடன்பாடு »11

## சிறுநீரக மாபியா தொடர்பான விசாரணைகளில் தடங்கல்கள்

பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.6
இலங்கையில் இடம்பெறும் சிறுநீரகக் கடத்தல் தொடர்பான தகவல்கள் அண்மையில் வெளிச்சத்துக்கு வந்திருந்த நிலையில், அது தொடர்பான விசாரணைகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இலங்கையில் இடம்பெறும் சிறுநீரகக் கடத்தல் தொடர்பான செய்திகள் அண்மையில் கொழும்பு ஊடகங்களில் வெளிவந்தன. »11

## கிணற்றில் வீழ்ந்து முதியவர் இறப்பு!

யாழ்., ஏப். 6
வட்டுக்கோட்டை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பண்ணாகம் பகுதியில், கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து முதியவர்ஒருவர்உயிரிழந்துள்ளார். முத்துக்குமார் அப்புத் »11

## இலங்கையில் இப்போது ஜனநாயகம் எங்கே?

நாணய நிதியத்திடம் கேட்பேன்
அரசுக்கு கிரியெல்ல மிரட்டல்

கொழும்பு, ஏப்ரல் 6
இலங்கையில் நீங்கள் வலியுறுத்திய ஜனநாயகம் எங்குள்ளது? என்று சர்வதேச நாணய நிதியத்திடம் கேட்பேன் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். »11

இலங்கையின்

## பொருளாதாரம் வீழ்ந்து எழும்!

கொழும்பு, ஏப்.6
இலங்கையின் பொருளாதாரம் இந்த வருடம்வீழ்ச்சியடைந்தே பின்னர் எழுச் »11

## 9 பவுண் நகைகள் மாதகலில் திருட்டு

யாழ்., ஏப். 6
இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் பகுதியில் ஒன்பது பவுண் »11

முச்சந்தி முரளி



"இப்ப ஜனநாயகம் எங்க எண்டு கேக்கினம் கொஞ்சக்காலத்தில இலங்கையே எங்க எண்டும் கேக்கிற காலம் வரும் பாருங்கோ"

நாவலர் மண்டப விவகாரம்;

## இடைக்காலத் தடையை நீக்க 'ரிட்' மனுவொன்று தாக்கல்?

இந்து கலாசாரத் திணைக்களம் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 6
நாவலர் மண்டபத்தில் இருந்து, யாழ்ப்பாணம் மாநகரசபை வெளியேறுவதற்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ள நிலையில் இந்து கலாசாரத் திணைக்களம் 'ரிட்' மனுவொன்றைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.
யாழ். மாநகரசபையை, நாவலர் மண்டபத்தில் இருந்து »11

10 வருடங்களாக

## 450 அரச நிறுவனங்கள் நட்டத்திலேயே இயங்கின

நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 6
கடந்த 10 வருடங்களாக 450 அரச நிறுவனங்கள் நட்டத்திலேயே இயங்கின. அதனால்தான் அரச நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்யும் தேவை உணரப்பட்டுள்ளது. மற்றும்படி அரச நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளில் எத்தகைய அரசியல் தலையீடுகளும் கிடையாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் »11

## 90 கிலோ ஐஸ் போதையுடன் 3 இந்தியர்கள் நேற்றுக் கைது

மன்னார், ஏப். 6
90 கிலோ ஐஸ் போதைப்பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில், 3 இந்தியர்கள் மன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
தலைமன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட அவர்கள், மன்னார் கடற்படைத் தளத்துக்கு நேற்று மாலை »11

## மாந்தை கிழக்கில் சடலமொன்று மீட்பு!

முல்லைத்தீவு, ஏப். 6
முல்லைத்தீவு, மாந்தை கிழக்குப் பகுதியில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. »11

புற்றுநோய்க் கூறுகள்

## யாழ். மக்கள் பயன்படுத்தும் சுண்ணாம்பிலேயே வீரியம்!

கொழும்பு, ஏப். 6
வெற்றிலையுடன் உட்கொள்ளும் இளஞ்சிவப்பு சுண்ணாம்பில் புற்றுநோயை உண்டாக்கும் 'ரோடமைன் பி' என்ற »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவின் வேட்பாளராக ரணில் களமிறங்கக்கூடும்!

**கொழும்பு, ஏப். 6**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆளும் கட்சி உறுப்பினர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளதால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரை வேட்பாளராக எதிர்பார்ப்பதில் தவறில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார். அத்துடன் நாட்டைக் கட்டியெழுப்பும் பணியை நேர்மையாகவும், துணிச்சலாகவும், வலுவாகவும் செய்யக் கூடிய தலைவர் எனவும் அவர் புகழாரம் சூட்டினார்.**



அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக களமிறக்க மொட்டுக் கட்சி தீர்மானித்துள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'சிறிலங்கா பொதுஜன பெரமுன இது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றவில்லை. ஆனால், இந்த நேரத்தில் கட்சி மற்றும் நாட்டுக்கு விசுவாசமான எவருக்கும் சவாலான பணி நாட்டை மீட்டெடுப்பதாக இருக்கவேண்டும். மேலும் ரணில் விக்கிரமசிங்க தனது பணி நடைமுறையில் வெற்றி பெற்றுள்ளார். எனவே, நாட்டுக்கு நல்லது நடக்கும் என்று நம்பிக்கை வைப்பதில் தவறில்லை' - என்றார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-44)

## தாதியருக்கு 60 இல் ஓய்வு நீதிமன்று தடை

கொழும்பு, ஏப். 6

தாதியர்கள் 60 வயதுக்குள் கட்டாயம் ஓய்வுபெற வேண்டும் என அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்று தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. 60 வயதில் தாதியர்கள் ஓய்வுபெறவேண்டும் என அமைச்சரவையால் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

குறித்து தீர்மானம் முறைகேடானது எனத் தெரிவித்த அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் உள்ளிட்ட குழுக்கள் மனுத் தாக்கல் செய்தன. இந்த மனு நேற்று மன்றில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன, ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு அமைச்சரவையின் தீர்மானத்துக்கு தடையுத்தரவை பிறப்பித்தது. (ச-இ)

## விவசாயிகளுக்கு இலவச உரம்

சாவகச்சேரி, ஏப். 6

கைதடி நாவற்குழி கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கு, கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் ரி.எஸ்.பி. உரம் இன்று வியாழக்கிழமை இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது.

கைதடி நாவற்குழி கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகள் உரத்தைப் பெற்றுக்கொள்ள தமது தேசிய அடையாள அட்டை, ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு, கடந்த முறை உரம் பெற்றமைக்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் வருகை தருமாறு அமைப்பினர் அறிவித்துள்ளனர். (ஓ-14,9)

## கொத்து, பிரைட் ரைஸ் விலை குறைக்கப்படும்

கொழும்பு, ஏப். 6

கொத்து, பிரைட் ரைஸ் மற்றும் மதிய உணவு ஆகியவற்றின் விலை குறைக்கப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

லிட்ரோ மற்றும் லாப்ஸ் எரிவாயு நிறுவனங்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைப் படுத்தும் வகையில் சமையல் எரிவாயுக்களின் விலையைக் குறைத்துள்ளது. அதனையடுத்து மதிய உணவுகளின் விலையைக் குறைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அந்தச் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (ஓ-14,இ)

## 2023 முதல் காலாண்டில் 25 பில். ரூபா வருமானம்

கொழும்பு, ஏப்.6

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தனியாள் முற்பண வருமான வரியாக 25 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை அரசாங்கம் ஈட்டியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம்வரை தனியாள் முற்பண வருமான வரியாக 25 ஆயிரத்து 577 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்தது. கடந்த ஜனவரி மாதம் 3 ஆயிரத்து 106 மில்லியன் ரூபாவும், பெப்ரவரி மாதம் 10 ஆயிரத்து 540 மில்லியன் ரூபாவும், மார்ச் மாதம் 11 ஆயிரத்து 931 மில்லியன் ரூபாவும் வரியாக அறவிடப்பட்டுள்ளது என்றும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஏ-இ)

## கசிப்புக் காய்ச்சியவர் பின்கதவால் தப்பிப்பு

கசிப்புக் காய்ச்சும் செயற்பாட்டில் ஈடுபட்ட பெண்ணின் வீட்டைத் திடீரென சோதனையிட்டபோது அவர் பின்கதவால் தப்பியோடியுள்ளார் என சாவகச்சேரி மதுவரி நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மட்டுவில் வடக்கில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த வீட்டுக்கு அதிகாரிகள் சென்றனர். அப்போது அவர்கள் வருவதைக் கண்டதும் குறித்தபெண் வீட்டின் பின்பக்க கதவால் தப்பித்துள்ளார். (ச-9)

## நெருக்கடி நிலைமை இலங்கைக்கு வாய்ப்பு

### *உலக வங்கி ஆலோசனை*

கொழும்பு, ஏப்.6

தற்போதைய நிதி நெருக்கடியை ஒரு வலுவான மற்றும் நெகிழ்ச்சியான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாக இலங்கையைப் பயன்படுத்த முடியும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை பணப்புழக்கத்தால் ஏற்பட்டுள்ள தற்காலிக பிரச்சினை அல்ல. அதை வெளிப்புற நிதியுதவியின் மூலம் தீர்க்க முடியும். ஆழமான மற்றும் நிரந்தரமான சீர்திருத்தங்களைச் செயற்படுத்துவதற்கு ஒரு தனித்துவமான வாய்ப்பை இந்தக் கடினமான நெருக்கடி வழங்கியுள்ளது.

இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ளும் பிறநாடுகளும் நெருக்கடிக்கான மூலகாரணங்களைத் தீர்க்காவிட்டால் அத்தகைய நெருக்கடிகள் மீண்டும் நிகழும்.

பொருளாதாரத்தில் நலிந்தவர்களையும், நெருக்கடியால் பாதிக்கப்படக்கூடியவர்களையும் பாதுகாப்பதற்கு உயர் வருமானம் கொண்டவர்கள் அதிக சுமைகளைப் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்றும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. (ஏ-இ)

## குச்சவெளியில் பிக்குவின் செயலால் இனமுறுகல் ஏற்படும் அபாயம்!

### *நாடாளுமன்றில் சுட்டிக்காட்டிய மஹ்ரூப் எம்.பி.*

கொழும்பு, ஏப்.6

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் உள்ள அரிசிமலை, பொன்பரப்பி மலை எனும் இடத்தில் பௌத்த பிக்கு ஒருவர் புத்தர் சிலை ஒன்றை அமைக்க முயற்சிக்கின்றார். அதைத் தடுக்க முயன்ற பொதுமக்களை பிக்குவின் மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியுள்ளார்.

இவ்வாறு திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் கேள்விநேரத்தில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரிடம் இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்தாவது:

பௌத்த பிக்குவின் செயலால் அங்கு இனமுறுகல் ஏற்பட்டுள்ளது. தொல்பொருள் திணைக்களத்தின் விசேட வர்த்தமானி அறிவித்தல், மக்களின் பாரம்பரிய வாழ்விடம் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளாமலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகளோடு பௌத்த பிக்குகளும் செல்கின்றனர். அதிகாரிகள் வேலை செய்யும்போது பௌத்த பிக்குகளுக்கு அங்கு என்ன வேலை? என்றார்.

இந்த விடயம் தொடர்பில் தனக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து விளக்கம் தரப்படும் என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (ஏ-இ)

## சிறுவர்களுக்கு சதுரங்கப் பயிற்சி

கொடிகாமம் ஏப்ரல் 6

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிறகுகள் அமைய செயற்பாட்டாளர்கள் சிறுவர்களுக்கு சதுரங்கப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புக்கள் கோண்டாவில் பலாலி வீதியிலுள்ள எழுதிரள் பணி மனையில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் 6 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பங்குபற்றலாம் எனவும் தொடர்ந்து சனி, ஞாயிறு தினங்களில் பயிற்சி வகுப்புக்கள் இடம்பெறும் எனவும் ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டணக் குறைப்புக்கு வாய்ப்புக்கள் உள்ளதாம்!

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தலைவர் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஏப்.6**
**மின்சாரக் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க வேண்டும் என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க வலியுறுத்தியுள்ளார்.**

நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
டொலரின் மதிப்புக் குறைவு மற்றும் நிலக்கரி விலைச் சரிவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு மின்கட்டணமும் குறைக்கப்பட வேண்டும். 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டின் முதல் காலாண்டின் மின்சாரத் தேவை 18 சதவீதத்தால் குறைந்துள்ளது.
மின் தேவை குறைவதால் மின் உற்பத்தி மற்றும் வழங்கல் செலவும் குறைகின்றது. இந்த ஆண்டுக்கான மின் தேவை மின்சாரசபையால் சரியாகக் கணிப்பிடப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆயினும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மதிப்பீடு சரியானது. குறைந்த தேவை உள்ளதாலேயே 35 சதவீத மின்கட்டண உயர்வைப் பரிந்துரைத்திருந்தோம்.
அதைப் புரிந்துகொள்ளாமல் இலங்கை மின்சாரசபை கோரிய 60 சதவீத மின் கட்டண அதிகரிப்புக்கு ஆணைக்குழுவின் பெரும்பாலான உறுப்பினர் கள் அங்கீகாரம் வழங்கியுள்ளனர். அதனால் மின்கட்டணத்தைக் குறைக்க வேண்டும் - என்றார்.

(எ-இ)

## மோ.சைக்கிளில் வந்தவரின் காலைக் கிழித்த பன்றி

கிளிநொச்சி, ஏப். 6
வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன், பன்றி மோதி அதில் பயணித்த நபரின் காலைக் கிழித்துள்ளது. இந்தச் சம்பவம் பூநகரியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்றது.
வேட்டைக்காரர்களால் துரத்தப்பட்ட பன்றி வீதியை குறுக்கறுத்துச் சென்றது. அதன் போது அந்த வழியே பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் பயணித்தவரின் காலைக் கிழித்தது.
பன்றியின் தாக்குதலில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் கால் முறிந்த நிலையில் வீதியில் விழுந்து காணப்பட்டார். அவரை யாழ்ப்பாணம் நோக்கி வாகனத்தில் பயணித்தோர் ஏற்றிச்சென்று சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர். அதன்பின்னர் நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஒ-14,9)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பங்குனி உத்தர பால் காவடி பவனி நேற்றுப் புதன்கிழமை பக்தி பூர்வமாக இடம் பெற்றது. (ஒ-14)

# காணி சுவீகரிக்கும் கடற்படையால் தம்பாட்டி மீனவர்களுக்கு ஆபத்து!

## கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப்.6
கடற்படையினராலும், அவர்களுக்குக் காணிகளை வழங்குவதாலும் தம்பாட்டி கிராமத்தில் தொழில் செய்வோர் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடும். எதிர்காலத்தில் நங்கூரமிடும் துறைமுகங்களை அமைப்பதற்கும் இது இடையூறாக அமையும்.
இவ்வாறு தம்பாட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் அன்னராசா தெரிவித்தார்.
நாரந்தனை, தம்பாட்டி கிராமத்தில் கடற்படையினருக்காகக் காணி அளவீடு செய்யப்படுவதற்கு எதிராகவும், அங்குள்ள கடற்படை முகாமை அகற்றக் கோரியும் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தப்பட்டது. அந்தப் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே தம்பாட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடற்படையினருக்காக அளவீடு செய்யும் காணி கடற்றொழிலாளர்கள் மீன்பிடிப்பதற்காக இறங்குதுறை செல்லும் பாதையிலேயே உள்ளது. இந்தக் காணியைக் கடற்படையினருக்கு வழங்குவதால் மீனவர்கள் படகுகளைக் கொண்டு சென்று கடலில் இறக்குவது கடினமானதாக மாறும். எதிர்காலத்தில் நங்கூரமிடும் துறைமுகங்களை அமைப்பதற்கும் இந்த நடவடிக்கை இடையூறாக இருக்கும். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், காணி பயன்பாட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் என்பவற்றில் இந்த விடயங்கள் பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்ட நிலையில், இந்தக் காணியைக் கடற்படையினருக்கு வழங்கமுடியாது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது.
இந்தநிலையில் காணியை அளவீடு செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. காணி அளவீடு செய்வது தொடர்பாக பொதுமக்களுக்கும் முன்னறிவிப்பு விடுவிக்கப்படவில்லை. காணியைக் கடற்படையினருக்காக சுவீகரிக்கும் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்றார். (எ-125)




**நாட்டில எத்தினையோ பிரச்சினை இருக்க, அதுகளைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாத ஆளுநர் தேவையில்லாத பிரச்சினையளை உருவாக்கிக் கொண்டு வாறார் எண்டு ஒரு குற்றச்சாட்டு இருக்கு. சும்மாயிருந்த ஆரியகுளத்தில மூக்கை நுழைக்க வெளிக்கிட்டு ஒரு சர்ச்சையை உருவாக்கின ஆளுநர், பிறகு நாவலர் கலாசார மண்டபப்பக்கமாக தன்ர கண்ணைத் திருப்பிட்டார். அந்த மண்டபம் முந்தி இந்துகலாசாரத்திணைக்களத்திட்டத்தான் இருந்தது. இடைப்பட்ட காலத்திலதான் முனிசிப்பலுக்கு கைமாறினது. அதுவும் திணைக்களம் கேக்கேக்க திருப்பிக் குடுக்கோனும் எண்ட நிபந்தனையோடதான் குடுபட்டது. ஆனால், இப்ப இருக்கிற நிலைமையில இந்து கலாசாரத்திணைக்களத்திட்ட மண்டபத்தைக் குடுத்தால் எல்லாம் கோவிந்தா ஆயிடும். முந்தி அந்தத் திணைக்களத்துக்கெண்டு இந்து கலாசார அமைச்சு இருந்தது. ஆரும் ஒரு தமிழர் அதுக்குப் பொறுப்பான அமைச்சரா இருப்பினம். ஆனால் இப்ப அப்பிடி ஒரு அமைச்சே இல்லை. பௌத்த சாசன அமைச்சுக்கு கீழதான் இந்து கலாசாரத் திணைக்களம் வருகுது.**

**இப்பிடிப்பட்ட நிலையில, அந்தத் திணைக்களத்திட்ட மண்டபத்தைக் குடுத்தால், கொஞ்ச நாளில நாவலர் சிலைக்குப் பதிலா அதில ஒரு புத்தர் சிலை வந்தாலும் ஆரும் ஒண்டும் கேக்க முடியாது. இதுகளை யோசிச்சுத்தான் மணிவண்ணன் மேயரா இருக்கேக்க ஆளுநரின்ர யோசனையை சபை நிராகரிச்சது. இப்ப சபை கலைஞ்சது ஆளுநருக்கு வசதியாப் போட்டுது. இப்ப அவர் அந்த மண்டபத்தை திணைக்களத்திட்ட குடுக்கச் சொல்லி முனிசிபல் ஆணையாளருக்கு கடிதம் போட்டு, தன்ர பவரைக் காட்ட வெளிக்கிட்டவர். ஆனால், அதுக்கு இப்ப தடை போடுறமாதிரி மணிவண்ணன் தரப்பு வழக்குப் போட, பதிலுக்கு திணைக்களத்தையும் ரிட் மனு போடச் சொல்லி ஆளுநர் தூண்டியிருக்கிறார். கிட்டடியில அந்த ரிட் மனு தாக்கல் செய்யப்படுமெண்டு தெரியுது.**

**அதுக்கிடையில, இவ்வளவுநாளும் இருந்திட்டு இப்ப அந்த நாவலர் மண்டபத்தை இந்து கலாசாரத் திணைக்களம் தரச்சொல்லிக் கேட்டதுக்கு ஒரு கதை சொல்லுப்படுகுது. கிட்டடியில அந்த மண்டபத்தில ஒரு ஊடகவியலாளரின்ர நினைவா புத்தகமொண்டு வெளியிட்டவை. அந்த விழாவில மேடைக்கு மேல கொழுவி இருந்த நாவலரின்ர படத்தைக் கழட்டி ஒரு மூலையில போட்டிட்டினம். நாவலரின்ர காணியில, அவரின்ர பேரால கட்டப்பட்ட மண்டபத்தில, எப்பிடி நாவலரின்ர படத்தைக் கழட்டி மூலைக்குள்ள போட ஏலும்? எண்ட கோபத்தில தான் நாவலர் அபிமானிகள் இந்து கலாசாரத் திணைக்களத்திட்ட சொல்லி அந்த மண்டபத்தை முனிசிபலிட்ட இருந்து பிடுங்குங்கோ எண்டு சொன்னவையாம். சரி, இந்தக்கதையையும் நம்பத்தானே வேணும்.**
**இப்பதான் நாவலரின்ர படத்தைக் கழட்டினதுக்காக மண்டபத்தைக் கேக்கினம் எண்டால், இதுக்கு முதல், மணிவண்ணன் மேயரா இருந்த காலத்தில் அதை ஒப்படைக்கோனும் எண்டு ஆளுநர் சொன்னதுக்கு என்ன காரணம், எண்டு ஆரும் சொல்லுவினமோ? இஞ்ச இருக்கிற எல்லாத்தையும் மத்தியிட்ட தாரை வார்க்கிற திட்டத்தில இதுவும் ஒரு பகுதி எண்டதுதான் உண்மை பாருங்கோ.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்துக்களே பொறிகள்!

'வடக்கு – கிழக்கிலுள்ள தொன்மையான பௌத்தத் தலங்கள் மீதும் பௌத்த எச்சங்கள் மீதும்தான் இந்து ஆலயங்கள் கட்டடப்பட்டிருக்கின்றன. பௌத்தத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இந்த ஆக்கிரமிப்புக்களை நாம் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்' – என்று தெரிவித்திருக்கின்றார் பொதுமக்கள் பாதுகாப்பு முன்னாள் அமைச்சரும் பெரமுனவின் முக்கியஸ்தருமான சரத் வீரசேகர. வவுனியா வெடுக்குநாறிமலையில் தொன்மைக்குடிகளான தமிழ்க் குடிகளின் பாரம்பரிய வழிபாட்டுத்தலமான ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் முற்றாக அழிக்கப்பட்டும், குருந்தூர்மலையில் நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறிய வகையில் விகாரையொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ள பின்னணியிலும்தான் இவ்வாறு தனது வன்மத்தைக் கக்கியிருக்கின்றார் அவர்.

வீரசேகர இவ்வாறு கருத்துக்களை வெளிப்படுத்துவதில் ஆச்சரியமேதுமில்லை. அவர் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களைத் தெரிவித்தால்தான் அது புருவங்களை உயர்த்தும் வகையில் இருக்கும். ஆனால், இங்கே விடயம் என்னவென்றால் பெரமுனவை உடலாகவும், ரணிலைத் தலையாகவும் கொண்ட தற்போதைய அரசாங்கத்திலும் இவர் இந்தத் இனவாதச் சேற்றைக் கக்கிக்கொண்டிருப்பதுதான். இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கும் இதர நாடுகளுடன் போட்டியிட முடியாமல் அந்நிய தேசங்களைச் சார்ந்திருக்கவேண்டிய வரலாற்றுப் பின்னடைவுக்கும் இனவாதமும் மதவாதமும்தான் முதன்மைக் காரணங்கள் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை ஏற்றிருக்கின்றார். பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் இதை ஏற்றுப் பகிரங்கப்படுத்தியிருக்கின்றார். எனில், எதற்காக அவர்கள் இத்தகைய இனவாதிகளின் குரல்களை இன்னுமின்னும் ஓங்க அனுமதிக்கின்றனர் என்ற கேள்வி இங்கு எழுவது தவிர்க்க முடியாதிருக்கின்றதல்லவா?


எமது தலைவிதியை இன்னுமொரு நபர் தீர்மானிப்பது போன்று, இலங்கையின் பொருளாதாரம் இப்போது இலங்கையின் கைகளில் இல்லை. சர்வதேச நாணய நிதியத்தின் கைகளுக்குள்ளும் சர்வதேசத்தின் பிடிக்குள்ளும் இந்த நாட்டின் பொருளாதாரமும் அபிவிருத்தியும் மாற்றம்பெற்று நெடுங்காலம். இன்னும் பட்டவர்த்தனமாகச் சொல்வதானால், பொருளாதாரம் தொடர்பில் இலங்கை அரசியல்வாதிகளுக்கு இப்போது எதுவுமே செய்ய முடியாதநிலை. நடப்பதைப் பார்ப்பது மட்டும்தான் அவர்கள் முன்னுள்ள ஒரேதெரிவு. ஆதலால், அரசியல் இருப்பைத் தக்க வைப்பதற்காகவும் வாக்குவங்கியைப் பலப்படுத்துவதற்காகவும் 'என்றும் இறவாத இனவாதத்தை' வீரசேகர தற்போது கையிலெடுத்திருக்கின்றார். வீரவன்ஸ, கம்மன்பில போன்ற இனவாதிகள் இப்போது அரசாங்கத்தை விட்டு வெளியேறியுள்ளனர். அவர்களால் அரசாங்கத்தின் திட்டங்களை 'வில்லங்கத்துக்கு விமர்சித்தாவது' பிழைப்பை நடத்திவிடமுடியும். ஆனால், அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டு அதன் எலும்புத்துண்டைத் தன் ஆதாயமாக வைத்திருக்கும் வீரசேகரவால் அரசாங்கத்தை சகட்டுமேனிக்கு விமர்சிக்கமுடியாது. அதனால்தான் அவர் முன்னுள்ள ஒற்றைத் தெரிவாக 'சிங்கள – பௌத்த பேரினவாதம்' அமைந்திருக்கின்றது. எவ்வளவுக்கெவ்வளவு இனவாதத்தை கக்கிவிட முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அது தனக்கான மூலதனம் என்று அவர் நம்புகின்றார், அதைத் தீவிரமாகச் செயற்படுத்துகின்றார், அவ்வளவே!.

வீரசேகரவின் இந்தக் கருத்துக்களை, அவருடைய தனிப்பட்ட கருத்து என்ற தோரணையில் எடுத்துவிட்டுக் கடந்துவிடவும் முடியாது. அவர் ஆளும் பெரமுனவின் முக்கியஸ்தர். முன்னாள் அமைச்சர். ரணில் அரசாங்கத்திலும் அங்கீகாரம்பெற்ற ஒரு 'தலைவர்'. ஆதலால், வீரசேகர வெளிப்படுத்தும் கருத்துக்களுக்கான 'பொறுப்புக்கூறல்' அவருக்கானதாக மட்டுமல்லாமல் ரணில் அரசாங்கத்தையும் சார்ந்ததாகவே இருக்கின்றது. எனவே இந்தக் கருத்துக்களுக்கான தனது நிலைப்பாட்டை, வீரசேகரவின் கருத்துக்கள் மீதான செயற்பாட்டை ரணில் அரசாங்கம் பகிரங்கப்படுத்தவேண்டும். இந்தக் கருத்துக்களின் கனதித்தன்மையை – தாற்பரியத்தை புரிந்துகொண்டு அது தொடர்பான நியாயப்பாடுகளை சர்வதேசம் வினவவேண்டும். ஏனெனில், இந்தக் கருத்துக்கள் நேற்றுடனோ அல்லது இன்றுடனோ அணைந்துபோகும் சிறு தீ அல்ல. கட்டுக்கடங்காத காட்டுத்தீக்கான பொறியைத்தான் வீரசேகர தற்போது விதைத்துக்கொண்டிருக்கின்றார். ஒரு காடு எரிந்தழிவதற்கு முன்னர், அந்த அழிவை ஏற்படுத்த வல்லது என்று கருதும் சிறுபொறியை அடியோடு அழித்துவிடுவதே அழகும் புத்திசாலித்தனமும்.

**நாளொரு நல்வார்த்தை**

" அறிவு என்பது நதியைப் போன்றது அது எவ்வளவு ஆழமாக இருக்கின்றதோ அந்தளவுக்கு அமைதியாக இருக்கும் "

– பெர்னாட்ஷா




# வெடுக்குநாறி ஆலய விவகாரம்: புத்தாண்டுவரை பொறுக்கவும்

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு



**கொழும்பு, ஏப். 6**

**வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறிமலை பிரச்சினை தொடர்பில் தமிழ் - சிங்கள புத்தாண்டு முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஜனாதிபதி பேச்சு நடத்துவார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் ஆகியோர் அமைச்சரவையில் கருத்துக்களை முன்வைத்தனர். தமிழ் - சிங்கள புத்தாண்டு முடிவடைந்த பின்னர் இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சு நடத்தப்படும் என்று ஜனாதிபதி கூறினார். இவ்விவகாரம் தொடர்பில் நீதிமன்றில் வழக்கும் உள்ளது என்ற விடயமும் குறிப்பிடப்பட்டது" - என்றார்.

இதேவேளை எதிர்வரும் 10ஆம் திகதிக்குப் பின்னர் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம் என்று அமைச்சர்களான ஜீவன் தொண்டமான் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடுக்குநாறிமலை அடிவாரத்தில் வைத்துக்கூறியிருந் தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

## வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்கள்

# இரண்டு மாதங்களில் செயற்படத்தொடங்கும்

கொழும்பு, ஏப். 6

அமைச்சரவை அனுமதித்த 3 வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களும் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இலங்கையில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் என



எதிர்பார்ப்பதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு வாரங்களில் மூன்று நிறுவனங்களுடனும் உரிய உடன்படிக்கைகளில் கையொப்பமிட இலங்கை திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ-இ)

**நாளை**

**07.04.2023**
**வெள்ளிக்கிழமை**
**பங்குனி 24**

சுபநேரம் : 06.08 - 07.38
ராகுகாலம் : 10.38 - 12.08

**பெரியவெள்ளி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா, பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது. (ஒ-14-66)

# முறைகேடுகளை ஆராய புதிய விசாரணைக் குழு

## வடக்கு உள்ளூராட்சித் திணைக்களம் நியமிப்பு

**கிளிநொச்சி, ஏப். 6**

**கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையில் கடந்த 4 ஆண்டுகளில் இடம்பெற்ற ஊழல், முறைகேடுகளை விசாரிப்பதற்கு புதிய புலன்விசாரணைக் குழு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் நியமிக்கப்பட்டுள்ளது என வடக்கு உள்ளூராட்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக ஊடகவியலாளர் ஒருவர் விடுத்த கோரிக்கைக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் இந்தப் பதிலை வழங்கியுள்ளது.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆரம்ப புலன் விசாரணைக்குழுவின் அறிக்கை ஒழுக்காற்று அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் அதில் குறைபாடுகள் காணப்பட்டன எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

அந்தக் குறைபாடுகளை நிவர்த்திக்குமாறு கோரியபோது அதில் விசாரணைக்குழுவின் தலைவர் இடமாற்றம் பெற்றுள்ளார்.

அதனால் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரமுடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கரைச்சிப் பிரதேச சபையில் இடம்பெற்ற ஊழல்களை விசாரிக்க புதிய ஆரம்ப புலன் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளர் ப. நவிச்சந்திரன், உறுப்பினர்களாக பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் செயலாளர் திருமதி த.தயானந்தன், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் பா. நக்கீரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ச-214)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆராய்வதற்கு இன்று அழைப்பு

கொழும்பு, ஏப். 6

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடாக கொண்டு வரப்படவுள்ளதாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை சவாலுக்கு உட்படுத்துவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இன்று பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சர்வஜன நீதி அமைப்பானது விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை நீக்கி அதற்குப் பதிலாக சர்வதேச மனித உரிமைகள் தர நிலைகளுக்கு இணங்கிய சட்டத்தை உருவாக்க இலங்கை அரசாங்கம் உறுதியளித்தது. 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற தலைப்பில் சட்டவரைவு தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள இவ்வரைவின் நோக்கமும் எல்லை வரையறையும் இலங்கை மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பறிப்பதாகவும், இலங்கையின் ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் பொறுப்புக்கூறும் அரசாங்கத்துக்கு மீளமுடியாத விளைவுகளை ஏற்படுத்தும். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை விட்வும் மிகவும் மோசமானதாகும். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது இலங்கையை ஒரு பொலிஸ் அரசாக மாற்றுவதோடு மக்களின் அடிப்படை உரிமைகளான கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம், அமைப்புக்களை உருவாக்கும் சுதந்திரம் மற்றும் அமைதியான போராட்டங்களை முன்னெடுக்கும் சுதந்திரம் போன்றவற்றையும் பறிக்கும் விதத்தில் காணப்படுகின்றது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் அடக்குமுறை தன்மையைக் கருத்திற்கொண்டு, அது ஆய்வு செய்யப்படவும், வலுவாக விவாதிக்கப்படவும் மேலும் சவாலுக்கு உட்படுத்தப்படவும் வேண்டும். விழிப்புணர்வு மற்றும் ஆக்கபூர்வமான ஊடாடலை முன்னெடுக்கும் நோக்கில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை சவாலுக்குட்படுத்தும் வழிகளைக் குறித்து விவாதிக்கவும் அதனை ஆராய்வதற்காகவும் தொடர்ச்சியான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக இன்றைய கலந்துரையாடலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஒ-இ)



# ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபாவின் சிலை வவுனியா நகரில் நேற்று திறந்து வைப்பு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்.) தலைவர் பத்மநாபாவின் சிலை வவுனியா மணிக்கூட்டுக்கோபுரச் சந்திக்கு அருகாமையில் நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் கே.அருந்தவராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்துகொண்ட கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சிலைக்கு மலர்மாலை அணிவித்து திரைச்சீலையை திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஏனைய பிரமுகர்கள், மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர். இந்தச் சிலை அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வவுனியா நகரசபைச் செயலாளரால் சில தினங்களுக்கு முன்னர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-110)



# செட்டிகுளம் பேருந்தில் உயிராபத்தான பயணம்

## போதிய இடவசதி இல்லாமையே காரணமெனப் பயணிகள் தெரிவிப்பு

வவுனியாவிலிருந்து செட்டிகுளத்துக்கு மாலை வேளையில் சேவையில் ஈடுபடும் இறுதிப் பேருந்தில் உயிருக்கு ஆபத்தான நிலையில் பொதுமக்கள் பயணத்தை மேற்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிகுளம் பகுதியில் வசிப்பவர்கள் அரச, தனியார் வேலை, சந்தை நடவடிக்கைகள், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் எனப்பலர் தினமும் வவுனியா நகருக்கு போக்குவரத்து செய்கின்றனர். அவர்கள் மாலை வேளை வவுனியாவிலிருந்து செட்டிகுளம் நோக்கிச் செல்வதற்கு போதிய வாகன வசதி இன்மையால் இறுதிப் பேருந்தில் தமது உயிரைக் கையில் பிடித்தபடி பயணத்தை மேற்கொள்கின்றனர்.

மாலை நேர இறுதிப் பேருந்து என்பதால் பலர் இந்தப் பேருந்தில் பயணிக்கின்றனர். அதிகரித்த பயணிகளுடன் போதிய இடவசதி இன்மையால் பேருந்தின் பல பகுதிகளிலும் தொங்கியபடியும் பேருந்தின் மேற்பகுதி, பிற்பகுதி எனப் பல பகுதிகளிலும் உயிருக்கு அச்சுறுத்தலான, ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். எனவே வவுனியா செட்டிகுளத்துக்கு மாலை நேரத்தில் போதியளவிலான பேருந்து சேவையை வழங்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14-18)

# அவலை நினைத்து உரலை இடிக்காதீர்கள்

## அரசிடம் சாணக்கியன் வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 6

சஜித் பிரேமதாஸவை பழிவாங்குவதாக நினைத்துக்கொண்டு உண்மையிலேயே வடக்கு - கிழக்கிலே வாழும் மக்களையே இந்த அரசாங்கம் பழிவாங்குகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு - கிழக்கிலே இருக்கும் அனைத்து மாவட்டங்களிலுமே நல்லாட்சிக் காலத்தில், வீடமைப்பு அதிகாரசபைக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் சஜித் பிரேமதாஸ பல வீட்டுத் திட்டங்களை ஆரம்பித்திருந்தார்.

ஆட்சிமாற்றத்தின் பின்னர், சஜித் பிரேமதாஸவின் அமைச்சின் கீழே வழங்கப்பட்ட வீடுகள் என்ற காரணத்துக்காக இந்த வீட்டுத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

சஜித் பிரேமதாஸவை பழிவாங்குவதாக நினைத்துக்கொண்டு வீட்டுத் திட்டங்களை முடிக்காமல் இருப்பதன் ஊடாக உண்மையிலேயே வடக்கு - கிழக்கிலே வாழும் மக்களைதான் நீங்கள் பழிவாங்குகின்றீர்கள்.

எத்தனையோ அமைச்சர்களிடம் இந்தக் கேள்விகளை நாங்கள் கேட்கும்போது கூட ஒவ்வொரு அமைச்சரும் இதை நாங்கள் முடித்துத் தருவோம் நிதி கிடைத்தால் முடித்துத்தருவோம் என கூறுகின்றனர்.

நிதியைப் பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தினுடைய பொறுப்பு. வீடமைப்பு அதிகாரசபைக்குரிய நிதி கிடைக்கும் பட்சத்தில் ஆறு மாதத்துக்குள் நாங்கள் முடிப்போம் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு பதில் என்றார். (ஒ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 30 . 11 . 1950



உதிர்வு 02 . 04 . 2023

## திருமதி பன்னீர்ச்செல்வம் வசந்தநாயகி

வேலணை கிழக்கு, 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பன்னீர்ச்செல்வம் வசந்தநாயகி கடந்த (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், பன்னீர்ச்செல்வத்தின் பாசமிகு மனைவியும், ரஜனி (இந்தியா), றஞ்சன், சிவா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நேசகுமார் (இந்தியா), துஸ்சியந்தினி, தனரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிசாந்தன், நிஷ்க்சனா, நிலக்சன், அஸ்மிதா, சன்றியா, அபிசாந், யஸ்மிகா, கபினா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இரத்தினகோபால், சாந்தநாயகி, சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனலட்சுமி, மனோன்மணி (கனடா), புஸ்பராணி, பற்குணதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், பமேலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**1ஆம் வட்டாரம்**
**வேலணை.**

**குடும்பத்தினர்**
**077 486 4446**

(cs24315) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 09 . 1953



மறைவு 02 . 04 . 2023

## செல்லத்துரை செல்வரத்தினம்

**(ஓய்வுநிலை வைத்தியசாலை பரிசாரகர் – சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை)**

மட்டுவில் தெற்கு, மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வரத்தினம் கடந்த (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், தனுஷிகா, மதுரிக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஞ்சீவ், ததீஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற பரமலிங்கம், கனகலிங்கம், ரஞ்சிதமலர், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தவமணி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் இரத்தினசிங்கம், பத்மகாந்தன் (ஓய்வுநிலை பிரதி அதிபர்), இந்திராதேவி, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிலஸ்யா, டதுர்ஷியா, மிதுஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைகளுக்காக மட்டுவில் நேரியத்தா இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR/39607)AH-1

# மரண அறிவித்தல்



## திரு. சின்னத்தம்பி சிவராஜா

**தோற்றம்** **03.09.1952** — **மறைவு** **05.04.2023**

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவராஜா நேற்று (05.04.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னையா மற்றும் இரத்தினம் தம்பதியரின் மருமகனும், சரோஜாவின் (ரமணி - பொற்பதி சரஸ்வதி முன்பள்ளி ஆசிரியை) அன்புக் கணவரும், துவாரகா, தனுஷா ஆகி யோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சத்தியபாமா, யோகராஜா, இரத்தினசிங்கம் மற்றும் அப்புத்துரை, கமலா ஆகியோரின் உடன்பிறப்பும், ராசாத்தி, ரஞ்சன், வவா மற்றும் காலஞ்சென்ற கண்ணன் ஆகியோரின் மைத்துனரும், கிருஷ்ணராஜின் அன்பு மாமனாரும், மேகா, அனீரா ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2023) வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

